DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -15

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.ஜானகி | Caste: |
| Husband's Name: | திரு. காசிநாதன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 9th day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A13 to A18 present. A8 and A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**Date: 09.01.2024**

**முதல் விசாரணை**

நான் வங்குடி கிராமத்தில் வசிக்கிறேன். இறந்துபோன காசிநாதன் என் கணவர். இறந்துபோன மகாலிங்கம், தர்மலிங்கம் ஆகியோர் எனது மகன்கள். இறந்துபோன பிரபு எனது கொழுந்தனார் மகன். இறந்துபோன சுரேசும் எனது கொழுந்தனார் மகன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். அவர்கள் எனது உறவினர்கள் இல்லை.

எதிரி பாரதிதாசன் மன்னார்குடியில் வசிக்கிறார். ஆஜர் எதிரிகளுக்கும், எங்களுக்கும் இடையே முதலில் கோவில் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. நிலதகராறும் இருந்துவந்தது. பின்னிட்டு தேர்தல் பிரச்சனையும் ஏற்பட்டது.

இப்போதிலிருந்து சுமார் 16 வருடங்களுக்கு முன்பாக வைகாசி மாதம் 2 ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்று பைப்பில் தண்ணீர் வரவில்லை என்பதால் எனது

மகன்கள் ராஜலிங்கம், அமிர்தலிங்கம், மகாலிங்கம் ஆகியோரும் எனது கொழுந்தனார் மகன்களான பிரபு, சுரேஷ் ஆகியோர்களும் வண்ணாங்குளத்திற்கு குளிக்க சென்றார்கள். அக்குளமானது நாங்கள் குடியிருக்கும் வீட்டிலிருந்து சுமார் முக்கால்கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது.

அவர்கள் குளித்துவிட்டு வந்துகொண்டிருந்தார்கள். அப்போது எதிரிகள் மாசிலாமணி மகன் ரவிசந்திரன், முத்துவேல் மகன்கள் காளிதாசன், திருஞானம், சக்திவேல் மகன்களான ரமேஷ் மற்றும் சுரேஷ், வீரகுமார் மகன் விஜய், சிவசாமி மகன் பிரபாகரன், ராமசாமி மகன் பழனிசாமி, ராசகண்ணு மகன் ராஜதுரை, உத்ராபதி மகன் திருவாளபுத்தூர் ரமேஷ், முருகேசன் மகன் பாஸ்கரன், பாஸ்கர் மகன் பாபு, முத்துகிருஷ்ணன் மகன் ஸ்ரீதர், வேலு மகன் தினேஷ், குணபாலன் மகன் சிலம்பரசன், தேசிங்குபாலன் மனைவி சசிகலா, தேசிங்குபாலனின் தாயார் கனகவள்ளி ஆகியோர் அடிக்கடி கூட்டம்போட்டு காசிநாதன் குடும்பத்தை அடியோடு அழித்துவிடவேண்டும் என்று பேசினார்கள்.

எதிரிகள் பாரதிதாசன், முருகேசன் மகன் பாஸ்கரன் ஆகியோர் தலைமையில் தான் எதிரிகள் மீட்டிங் போட்டு பேசியுள்ளார்கள். அந்த கூட்டங்கள் எதிரி காளிதாசன் வீட்டில் நடந்தது. எங்களது வீட்டிற்கு எதிர்புறம் தான் எதிரி காளிதாசன் வீடு உள்ளது. அவ்வாறு எதிரிகள் மீட்டிங் போட்டு பேசியதை நான் எனது வீட்டிலிருந்து கேட்டிருக்கிறேன். சம்பவம் நடந்ததிற்கு 5, 6 நாட்களுக்கு முன்பாக நான் அதனை கேட்டேன். எதிரிகள் அடிக்கடி அவ்வாறு கூடிபேசிக்கொண்டிருந்ததால் நான் எனது மகன்களை பார்த்து ஜாக்கிரதையாக இருக்கும்படி சொல்லியிருக்கிறேன்.

என் மகன்கள் குளித்துவிட்டு வந்தபோது எதிரிகள் ரவிசந்திரன், பாஸ்கரன், திருஞானம், காளிதாசன், பழனிசாமி, விஜய், பிரபாகரன், ராஜதுரை, திருவாளபுத்தூர் ரமேஷ், ஸ்ரீதர், தினேஷ், சிலம்பரசன், சசிகலா, பாபு ஆகியோர் கைகளில் கத்திகளுடனும், வீச்சருவாளுடனும் துரத்திகொண்டு வந்தார்கள். அந்த நேரத்தில் எதிரிகள் வேலு மகன் தினேஷ், ராஜதுரை ஆகியோர் மகாலிங்கத்தை விரட்டிகொண்டு வந்தார்கள்.

எதிரிகள் குணபாலன் மகன் சிலம்பரசன், திருவாளப்புத்துார் ரமேஷ் ஆகியோர் ராஜலிங்கத்தையும், அமிர்ந்தலிங்கத்தையும் விரட்டிகொண்டு வந்தார்கள். என் மகன் மகாலிங்கம் எங்களை நோக்கி என் உயிர் போகபோகிறது அம்மா , அப்பா, அண்ணா நீங்கள் எல்லோரும் தப்பித்து ஓடிவிடுங்கள் என்று கத்தினார்.

எதிரிகள் வேலு மகன் தினேசும், ராஜதுரையும் மகாலிங்கத்தை காமராசா வீட்டு சந்தில் வைத்து வெட்டிவிட்டார்கள். மகாலிங்கம் கையில் வாட்ச் கட்டியிருந்தார். எதிரி தினேஷ் மகாலிங்கம் கையில் கட்டியிருந்த வாட்சை அறுவாளால் வெட்டிகொண்டு இது வெறும்பையல் வீட்டு வாட்ச் உங்களது குடும்பத்து சொத்துக்கள் மற்றும் ஆடுமாடுகளையும், வீட்டையும் நாங்கள் சூறையாடிவிட்டோம், வைக்கோல்போரை அழித்துவிட்டோம் எனவே இனிமேல் உங்கள் குடும்பத்திற்கு என்று எதுவும் கிடையாது என்று சொன்னார். மகாலிங்கம் இறந்துவிட்டார்.

எதிரிகள் குணபாலன் மகன் சிலம்பரசன், திருவாளப்புத்துார் ரமேஷ் ஆகியோர் எனது மகன்கள் ராஜலிங்கத்தையும், அமிர்தலிங்கத்தையும் முடுக்கிகொண்டு ஓடிவந்தார்கள். ராஜலிங்கமும், அமிர்தலிங்கமும் அங்கிருந்து தப்பி ஓடினார்கள். எதிரிகள் முருகேசன் மகன் பாஸ்கரன், பாஸ்கரன் மகன் பாபு, முத்துகிருஷ்ணன் மகன் ஸ்ரீதர், சக்திவேல் மகன்கள் ரமேஷ் மற்றும் சுரேஷ், வீரகுமார் மகன் விஜய் ஆகியோர் எனது மூத்த மகன் தர்மலிங்கத்தை வளைத்து பிடித்துக்கொண்டார்கள்.

எதிரி காளிதாசன் தர்மலிங்கத்தை காலால் உதைத்தார். தர்மலிங்கம் கீழே விழுந்துவிட்டார். கீழே விழுந்த தர்மலிங்கத்தை சக்திவேல் மகன் ரமேசும், பாஸ்கரனும் வெட்டினார்கள். சக்திவேல் மகன் ரமேஷ் என் மகன் தர்மலிங்கத்தின் தலையை தனியே வெட்டி எடுத்துவிட்டார்.

என் மகனை விட்டுவிடுங்கள் என்று என் கணவர் காசிநாதன் சென்று எதிரிகளை கையெடுத்து கும்பிட்டார். அப்போது எதிரிகள் குணபாலன் மகன் சிலம்பரசனும், திருவாளப்புத்துார் ரமேசும் என் கணவரை வெட்டிவிட்டார்கள். அப்போது நான் சென்று என் மகன்களையும், கணவரையும் வெட்டிவிட்டீர்கள் என்னையாவது விட்டுவிடுங்கள் என்று கெஞ்சினேன். ( சாட்சி சாட்சியம் அளித்துகொண்டிருந்தவர்

கதறி அழுகிறார். தன் உடலிலுள்ள காயத்தழும்புகளை நீதிமன்றத்திற்கு காட்டுகிறார் சாட்சி சுமார் 10 நிமிடங்கள் தன்நிலை மறந்து கதறி அழுதார் )

எதிரிகள் காளிதாசன், ராஜதுரை, திருவாளபுத்துார் ரமேஷ்,தினேஷ் ஆகியோர் என்னை வெட்டினார்கள். இடது தோள்பட்டை, வலது கையின் மணிகட்டுக்கு மேலே, இடது பக்க தலை, வயிறு, ஆகிய இடங்களில் வெட்டினார்கள். தினேஷ் எனது தலை மயிரை அறுத்தார். அதனால் நான் மயக்கமாகி கீழே விழுந்துவிட்டேன்.

என் கணவர் வெட்டுபட்டு இறந்துவிட்டார். என்னை தஞ்சாவூர் மருத்துவமனையில் அனுமதித்துவிட்டார்கள். அங்கு தான் எனக்கு தையல்கள் போடப்பட்டது. போலிசார் என்னை சனிகிழமையன்று விசாரித்தார்கள்.

<u>1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் எங்களது வீடு மற்றும் சொத்துக்களை சூறையாடியபோது காலை 8.00 மணி இருக்குமா என்றால் இருக்கும். அந்த கலவரம் சுமார் 1/2 மணி நேரம் நடந்திருக்குமா என்றால் நடந்திருக்கலாம். அன்று காலை 9.00 மணிக்கு சுமார் 200 முதல் 300 போலிசார் எங்கள் கிராமத்திற்கு வந்துவிட்டார்ள் என்றால் சரிதான். காலை 9.00 மணிக்கு நான் போலிசாரிடம் அனைத்து சங்கதிகளையும் சொல்லிவிட்டேன் என்றால் ஆமாம்.

அப்போது போலிசார் என் மகன் ராஜலிங்கத்தை விசாரித்தார்கள் என்றாலும், அப்போது ராஜலிங்கம் நடந்த சங்கதிகளை புகார் எழுதிக்கொடுத்தார் என்றாலும் சரிதான். என் மகன் ராஜலிங்கம் தான் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றாரா என்றால் இல்லை. போலிசார் தான் அழைத்து சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தபோது சம்பவதினத்தன்று பாரதிதாசன் அங்கு இல்லை என்று சொல்லிவிட்டேன்.

போலிசார் விசாரணையில் நிலதகராறு, தேர்தல் பிரச்சனை ஆகியவை சம்மந்தமாக நான் சொல்லியிருக்கிறேன். என் மகன் ராஜலிங்கம் சொத்துக்களை சேதாரம் செய்தது மற்றும் கொலை சம்மந்தமாக கொடுத்த புகாரின்பேரில் போலிசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எங்கள் ஊரில் கலவரம்

நடந்த அன்று வெளியூரை சேர்ந்த 50 ரவுடிகள் வந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு பின்னிட்டு சுமார் ஒருமாதம் காலம் சுமார் 200 போலிசார் எங்கள் கிராமத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தார்கள் என்றால் சரிதான்.

நான் மருத்துவமனைக்கு சென்றபோது அங்கு வைத்து மருத்துவர் என்னை விசாரித்து என்னை யார்யார் தாக்கினார்கள் என்று கேட்டு எழுதிக்கொண்டாரா என்றால் எழுதிக்கொண்டார். மருத்துவரிடம் நான் என்னை மொத்தம் 35 பேர் தாக்கியதாக சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. 18 பேர் என்று தான் சொல்லியிருக்கிறேன். என்னை எத்தனை போலிசார் மருத்துவமனைக்கு தூக்கி சென்றார்கள் என்றால் அப்போது எனக்கு நினைவில்லாத காரணத்தினால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. என்னை போலிஸ் வாகனத்தில் தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்.

நடந்த சம்பவம் குறித்து போலிசாரும் மருத்துவரிடம் சொன்னார்களா என்றால் சொன்னார்கள். போலிசார் விசாரணையில் எதிரிகள் எனது தலைமுடியை வெட்டியதாகவும், உடலில் வெட்டியதாகவும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் எதிரி காளிதாசன் என்பவரது வீடு எனது வீட்டிற்கு எதிர்புறம் இருக்கிறது என்றும் அங்கு வைத்து எதிரிகள் அனைவரும் கூடி பேசினார்கள் என்றும், அவ்வாறு பேசியது எனக்கு கேட்டது என்றும் சொல்லியிருக்கிறேன்.

எதிரிகள் காளிதாசன் வீட்டில் கூட்டம்போட்டு பேசியது சம்மந்தமாக ராஜலிங்கம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். ஆனால் போலிசார் அந்த புகாரை எடுத்துக்கொள்ளவில்லை. எனது மகன் மகாலிங்கம் எதிரிகள் அவரை துரத்தியபோது எங்களை பார்த்து அப்பா, அண்ணா, அம்மா தப்பித்து ஓடிவிடுங்கள் என்று கத்தியதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை.

எதிரிகள் ரவிசந்திரன், பாஸ்கரன், திருஞானம், காளிதாசன், பழனிசாமி, விஜய், பிரபாகரன், ராஜதுரை, திருவாளபுத்தூர் ரமேஷ், ஸ்ரீதர், தினேஷ், சிலம்பரசன், சசிகலா, பாபு ஆகியோர் கைகளில் கத்திகளுடனும், வீச்சருவாளுடனும் துரத்திகொண்டு

வந்தார்கள் என்று நான் முதல்விசாரணையில் சொன்ன சங்கதியை போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். அதுதொடர்பாக போலிசார் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

எனது மகன்கள்ராஜலிங்கமும், அமிர்தலிங்கமும் தப்பித்து ஓடிவிட்டார்கள் என்று நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதியை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றாலும், இன்று தான் முதல்முறையாக சொல்லுகிறேன் என்றாலும் சரிதான். சாட்சி நான் பொய் சொல்லமாட்டேன் என்றும், இந்த இடத்தில் நின்று கொண்டு பொய் சொல்லகூடாது என்றும் சுயமாக கூறுகிறார்.

நான் முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகளை இன்று தான் முதல்முறையாக சொல்லுகிறேன் என்றாலும், அவற்றை நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றாலும் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கவே இல்லை என்றும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் சாட்சி சுயமாக சொல்லுகிறார்.

<u>6–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என் கணவருக்கு சொந்தமாக 15 ஏக்கர் நிலம் இருந்தது. நான் கூலிவேலைக்கு போகவில்லை. என் மகன்கள் மற்றும் மருமகள் ஆகியோர் கூலிவேலைக்கு போகவில்லை. என் மகன்கள் மகாலிங்கம், ராஜலிங்கம், அமிர்தலிங்கம் ஆகிய மூவரும் படித்தவர்கள். ராஜலிங்கம் வெளியூருக்கு சென்று மேல்படிப்பு படித்துக்கொ்ண்டிருந்தார் என்றால் சரிதான். சம்பவதினத்தன்று அவர் ஊரில்தான் இருந்தார் என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார்.

என் மகன் மகாலிங்கம் விவசாய வேலைதான் செய்துவந்தார். அமிர்தலிங்கம் துணிகடையில் வேலை செய்துவந்தார் என்றால் சரியல்ல. அவரும் விவசாயம் தான் செய்தார். அவர் வெளியூரில் துணிகடையில் வேலை செய்துவந்தார் என்றால் சரியல்ல. பைப்பில் தண்ணீர் வராத காரணத்தினால் தான் எனது மகன்கள் வண்ணாங்குளத்திற்கு குளிக்க சென்றார்கள் என்று நான் இன்று தான் முதல்முறையாக சொல்லுகிறேன் என்றால் சரிதான்.

எங்கள் ஊர் முழுவதும் பைப்பில் தண்ணீர் வரவில்லை. எங்கள் ஊரில் தண்ணீர் வரவில்லையென்றால் வண்ணாங்குளத்திற்கு சென்று குளிப்பது வழக்கம் என்றால் சரிதான். என் மகன்கள் மூவரும், என் கொழுந்தனார் மகன்கள் இருவரும் ஆகமொத்தம் ஐந்துபேர் மட்டும் தான் வண்ணாங்குளத்திற்கு சென்றார்கள். தேசிங்குபாலன் கொலைவழக்கிலிருந்து ஜாமீனில் வெளியே வந்த ராஜலிங்கம் மற்றும் அமிர்தலிங்கம் ஆகிய இருவரையும் சிறிது நாட்கள் வெளியூரில் இருங்கள் என்று நான் கேட்கவில்லை.

எனது வீட்டிற்கும், எதிரி காளிதாசன் வீட்டிற்கும் இடையே எவ்வளவு தொலைவு என்றால் சுட்டிகாட்டும் தொலைவு சுமார் 30 அடி இருக்கும். நான் சொன்னதுபோல் எதிரிகள் காளிதாசன் என்பவரது வீட்டில் கூடிபேசவில்லை என்றாலும், காளிதாசன் வீட்டில் பேசுவது எங்களது வீட்டிற்கு கேட்காது என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்தபோது நானும், என் கணவர் மட்டும் தான் வீட்டில் இருந்தோம் என்றால் சரியல்ல. நான், எனது கணவர் காசிநாதன், தர்மலிங்கம், தர்மலிங்கத்தின் மனைவி ஆகியோர் வீட்டில் இருந்தோம்.

எதிரிகள் மகாலிங்கத்தின் கையில் இருந்த வாட்சை பார்த்து வெட்டியதாகவும், அப்போது வெறும்பையல் வீட்டு வாட்ச் என்று சொன்னதாகவும் இன்று தான் முதல்முறையாக நீதிமன்றத்தில் சொல்லுகிறேன் என்றால் சரிதான். என் மகன்கள் ராஜலிங்கமும், அமிர்தலிங்கமும் தப்பித்து சென்றுவிட்டதாக இப்போது தான் முதல்முறையாக சொல்லுகிறேன் என்றால் சரிதான்.

என்னையும், என் கணவரையும் எதிரிகள் வெட்டியபோது அதனை தடுப்பதற்கு அமிர்தலிங்கமும், ராஜலிங்கமும் வரவில்லையா என்றால் அவர்கள் உயிர் தப்பித்துதான் ஓடினார்கள். நான் எனது கணவரை வெட்டியபோது தடுக்க சென்றேன் என்றால் சரிதான். கணவரைவிட எனது உயிர் முக்கியமா என்று கருதி தடுக்க சென்றேன் என்று சாட்சி சுயமாக கூறுகிறார்.

அமிர்தலிங்கமும், ராஜலிங்கமும் அன்றைய தினம் ஊரிலே இல்லை என்றாலும்,அப்படி இருந்திருந்தால் அவர்கள் நாங்கள் வெட்டுபட்டபோது வந்து

தடுத்திருப்பார்கள் என்றாலும் சரியல்ல. சம்பவதினத்தன்று அமிர்தலிங்கம் வெளியூரில் துணிக்கடையில் வேலை செய்துகொண்டிருந்தார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளில் பெரும்பாலனவர்கள் தேசிங்குபாலன் கொலைவழக்கில் எனது மகன்களுக்கு எதிராக சாட்சி சொன்னவர்கள் என்றால் சரிதான்.

வேறு யாரோதான் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் என்றாலும், எதிரிகள் மீது உள்ள விரோதத்தின் காரணமாக அவர்களுக்கு எதிராக பொய்சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. 6 ஆம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும், அவர் என்னை வெட்டவில்லை என்றாலும் சரியல்ல.

<u>13–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வங்குடிகிராமத்தில் காளியம்மன்கோவில் தெருவில் வசிக்கிறேன். அது கிழமேல்தெரு. எதிரிகள் காளிதாசன் வீட்டில் தினசரி கூடிபேசுவார்களா என்றால், 10 நாட்கள், 15 நாட்கள், 2 நாட்கள் என்று வெவ்வேறு இடைவெளிகளில் கூடிபேசுவார்கள். வீட்டிற்குள்ளே தான் ஹாலில் மீட்டிங் போடுவார்கள். நான் எனது வீட்டிலிருந்து அவர்கள் மீட்டிங் போடுவதை பார்ப்பேன்.

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். அந்த விசாரணையில் நான் எதிரிகள் காளிதாசன் வீட்டில் தான் கூடிபேசினார்கள் என்று சொல்லியிருக்கிறேன். எங்களது குடும்பத்திற்கும், எதிரி பாரதிதாசனுக்கும் நேரடியான விரோதம் கிடையாது என்றால் சரியல்ல. நிலதகராறும், தேர்தல்தகராறும் இருந்துவந்தது. அது என்ன நிலதகராறு என்றால் எதிரி பாரதிதாசனின் நிலத்தின் வழியாகத்தான் நாங்கள் எருவடிக்கவேண்டும் அதனை அவர்கள் தடுத்தார்கள். அதனால் நாங்கள் எங்களது வயல் வழியாக எதிரிகளை நடக்ககூடாது என்று சொல்லிவிட்டோம்.

அந்த நிலதகராறு சம்மந்தமாக போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். அந்த நிலதகராறு சம்மந்தமாக இரண்டுபக்கம் இருந்தும் சிவில் வழக்குகள் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரி பாரதிதாசன் சம்பவத்திற்கு சுமார் 20 வருடங்ளுக்கு முன்பாகவே காட்டுமன்னார்குடிக்கு வேலை விஷயமாக குடிபெயர்ந்து சென்றுவிட்டார் என்றால் சரிதான். ஆனால் அவர் அடிக்கடி எங்கள் கிராமத்திற்கு வந்துசெல்வார்

என்று சாட்சி சுயமாக கூறுகிறார்.

எதிரி பாரதிதாசன் எங்களது கிராமத்திற்கு 10 நாட்கள், 7 நாட்கள், 2 நாட்கள் போன்ற காலஇடைவெளியில் எங்கள் கிராமத்திற்கு வந்து கூட்டம்போடுவார். எதிரி பாரதிதாசன் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துநராக வேலைக்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். அவர்தான் இவ்வழக்கு சம்பவத்திற்கே காரணம் என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார்.

தேசிங்குபாலன் கொலைவழக்கில் எனது மகன்கள் அமிர்தலிங்கம், ராஜலிங்கம், தர்மலிங்கம், மகாலிங்கம், பிரபு மற்றும் சுரேஷ் ஆகியோர் எதிரிகள் என்றால் சுரேஷ் மட்டும் இல்லை. தேசிங்குபாலன் கொலை வழக்கில் இந்த வழக்கின் எதிரிகளான திருஞானம், ரவிசந்திரன், சக்திவேல் மகன் ரமேஷ் ஆகியோர் சாட்சிகள் என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது மகன்கள் அமிர்தலிங்கம், ராஜலிங்கம் ஆகியோருக்கு தண்டனை விதிக்கப்பட்டது என்றால் சரிதான்.

கோவில் பிரச்சனை, தேர்தல்பிரச்சனை ஆகிவற்றின் காரணமாக எங்களது குடும்பத்திற்கு எதிரிகள் அதிகம் என்றால் சரியல்ல. எதிரிகள் மட்டும் தான் எங்களுக்கு விரோதிகள். எதிரி பாரதிதாசன் திருஞானத்தின் அண்ணன் என்ற காரணத்தினால் அவர் இந்த வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 13 எதிரி பாரதிதாசனுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

<u>8 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் எனது உறவினர்கள் என்றால் சரியல்ல. அவர்கள் எனது குடும்பத்தை அழிக்கவந்தவர்கள் என்று சாட்சி சுயமாக கூறுகிறார். வங்குடி கிராமத்தில் பொதுவாக விவசாய கூலி வேலைக்கு செல்பவர்கள் அதிகாலை 4.00 மணிக்கெல்லாம் புறப்பட்டு சென்றுவிடுவார்கள் என்றால் சரிதான். அதிகாலை நேரத்தில் எங்களது குடும்பத்தினர் தாக்கப்பட்டதால் எங்களுக்கு எங்களை யார் தாக்கியது என்றே தெரியவில்லை என்றால் சரியல்ல.

8 ஆம் எதிரி அரசியல் கட்சியில் முக்கிய பொறுப்பில் இருந்தார் என்றாலும்,

எனவே திட்டமிட்டு அவர்மீது பொய் புகார் கொடுத்திருக்கிறோம் என்றாலும் சரியல்ல.

**3 ஆம் எதிரி தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையானது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

**<u>மறுவிசாரணை</u>**

நான் முதல்விசாரணையில் சொன்ன சொத்துக்கள் சேதப்படுத்திய சம்பவமானது தேசிங்குபாலன் கொலைக்கு பின்னால் நடந்தது. அது சம்மந்தமாக நாங்கள் புகார் கொடுத்தோம். அதனை போலிசார் எடுத்துக்கொள்ளவில்லை.

**<u>1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் மறுகுறுக்குவிசாரணை</u>**

சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டு, ஆடுமாடுகள் அழிக்கப்பட்ட சம்பவமானது என் கணவர் கொலைசெய்யப்பட்ட தினத்தன்று காலையில் நடந்ததா என்றால் இல்லை. அது தேசிங்குபாலன் கொலைசெய்யப்பட்ட சமயத்தில் நடைபெற்றதாகும். அது சம்மந்தமாக நாங்கள் புகார் கொடுத்தோம். அதனை போலிசார் எடுத்துக்கொள்ளவில்லை.

நான் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அதனால் தான் நாங்கள் கொடுத்ததாக சொல்லும் புகாரின்பேரில் போலிசார் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. சொத்துக்களை சேதப்படுத்தியது சம்மந்தமாக எதிரிகள் மீது தான் புகார் கொடுத்தோம்.

**மற்ற எதிரிகள் தரப்பில் மறுகுறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.